# 8

# மபாஹிமுல் இஸ்லாமிய்யா

## 8.1 உலக வாழ்வு பற்றிய கண்ணோட்டம்

மனிதன் உலகில் வாழ்கின்றான். அவனுக்காகவே இவ்வுலகும் அதிலுள்ளவையும் படைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனிதன் உலகை அனுபவிக்க வேண்டுமென ஒரு சாரார் கூறுவர். இல்லை அதனை முற்றாகத் துறக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மீக விமோசனம் பெறலாம் என மற்றொரு சாரார் கூறுவர்.

ஆனால், இஸ்லாம் இவ்விரு கருத்துக்களையும் ஏற்கவில்லை. மனிதன் உலகின் வளமான வாழ்க்கைக்கு உழைக்கின்ற அதேநேரம் மறுமையின் விளைநிலமாக இதனைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கருத்தாகும்.

**அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.**

எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் மறுமையிலும் நன்மை தருவாயாக நரக நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை இரட்சிப்பாயாக எனக் கோருவோரும் உண்டு தங்கள் வினையின் பாக்கியம் இவர்களுக்குத்தான் உண்டு. தவிர அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் மிகத் தீவிரமானவன். (அல்குர்ஆன்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

ஒரு முஸ்லிம் ஒரு பயிரை நட்டி அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது ஒரு மிருகமோ அல்லது பறவையோ உட்கொண்டால் அது அவருக்கு தர்மமாக அமையும் (புஹாரி, முஸ்லிம்)

இங்கு இம்மை, மறுமை இரண்டின் விமோசனத்துக்காகவும் மனிதன் வாழ வேண்டுமென்று கூறப்படுகின்றது.

அநியாயம் செய்யும் நோக்கமோ அத்துமீறும் நோக்கமோ இன்றி எவரொருவர் ஒரு கட்டிடத்தைக் கட்டினாரோ அல்லது ஒரு பயிரை நட்டினாரோ அதனைக்கொண்டு ரஹ்மானுடைய படைப்புக்கள் நன்மையடையும் காலமெல்லாம் அவருக்கு நிலையான நற்கூலி கிடைத்துக்கொண்டே இருக்கும்.” (அல்ஹதீஸ்)



இலவச விநியோகத்திற்காக

எனவேதான் தொழில் செய்து வாழும் அடியார்கள் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலித்தொழில் முதலிய தொழில்கள் மூலமும் இன்னும் ஹலாலான முறையில் பொருளீட்டலையும் இஸ்லாம் பாராட்டுகின்றது. அதன் மூலம் தேவையான இல்லறம், வாகனம், உடைகள் முதலியன பெற்று மகிழ்வோடு வாழ்வதும் அதற்கு நன்றிக் கடனாக அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றி வாழ்வதுமே நன்றியுள்ள அடியானுக்கு அடையாளமாகும். அல்லாஹ்விடமேயன்றி பிறரிடம் கையேந்தி யாசகத் தொழிலில் ஈடுபடுவதையோ, சமூக விரோதச் செயல்களான ஏமாற்று, திருட்டு, விபச்சாரம், மோசடி, போதைப்பொருள் விற்பனை மூலம் பொருளீட்டுவதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

''உங்களை சுவர்க்கத்திற்கு நெருக்கமாக்கும் எச்செயலையும் நான் ஏவாமல் விட்டதில்லை. உங்களை நரகத்திற்கு நெருக்கமாக்கும் எச்செயலையும் தடுக்காமல் விட்டதில்லை'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் : அஹ்மத்)

''தன் சகோதரனின் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகப் புறப்பட்டு அதற்காக முழு முயற்சியும் செய்வாராயின் அது பத்து ஆண்டுகள் இஃதிகாப் இருப்பதை விட மிகச் சிறந்த நன்மையை அவனுக்கு ஈட்டித்தரும்''

*''எல்லோரும் பொறுப்புதாரிகளே! அவரவர் பொறுப்புப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவர்'' (நபி மொழி)*

இந்த உலகத்தில் எமக்கென்று பொறுப்புக்கள் பல உள்ளன அவற்றை எம்மால் ஒருபோதும் புறக்கணித்துவிட்டு வாழமுடியாது. நாட்டின் தலைவர் ஒரு பொறுப்புதாரி அவரது பொறுப்புக்கள் பற்றி அவர் விசாரிக்கப்படுவார். ஆண் அவரது குடும்பத்தின் பொறுப்புதாரி. அவரது பொறுப்பைப் பற்றி அவர் விசாரிக்கப்படுவார். பெண் தனது கணவனின் வீட்டின் பொறுப்பாளி: அவள் அவளது பொறுப்பைப் பற்றி விசாரிக்கப்படுவாள்.

*ஒரு பணியாள் தனது எஜமானனின் சொத்துக்களுக்குப் பொறுப்பாளி. அதுபற்றி அவன் விசாரிக்கப்படுவான். உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளரே! உங்களது பொறுப்பைப்பற்றி விசாரிக்கப்படுவீர்கள் (புகாரி-முஸ்லிம்)*

சமூக சேவைகள் இஸ்லாத்தின் பார்வையில் முக்கிய கடமைகளாகும். இவை ஹுகூகுல் இபாதாவாகக் கருதப்படும். இவை அனைத்தும் இபாதத்களாகும்.

பாதையில் விழுந்து கிடக்கின்ற முட்களை அகற்றுதல், இரண்டு நபர்களுக் கிடையில் சமாதானம் செய்துவைத்தல் போன்ற காரியங்கள் சாதாரண காரியங்களாக எமது பார்வையில் காணப்பட்டாலும் இவையனைத்தும் இபாதத்களாகவே கருதப்படும்.

''மரணத்தின் பின்னர் மகத்தானதொரு வாழ்க்கையுண்டு. அது நிரந்தரமானது. அங்கு நல்வாழ்வு பெற இங்கு சிறப்பாக வாழுங்கள்'' (நபி மொழி)

*''அவ்வாறே நடுநிலையான சமுதாயத்தவராக நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே, நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாக இருங்கள்: எமது தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பார்'' (அல் - பகரா 143)*

உலக வாழ்வு அற்பமானது வெறும் கேளிக்கைதான் என்பனபோன்ற குர்ஆன் வசனங்களும் இல்லாமலில்லை. ஆனால் நாம் இவ்வசனத்தை ஆராய்ந்து நோக்குகையில் அது மறுமை வாழ்வுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மறுமை வாழ்வுடன் ஒப்பிடுகையில் இவ்வுலக வாழ்வு அற்பமேயன்றி வேறில்லை. அல்குர்ஆன் வசனங்களை முழுமையாகவும் பிழையின்றியும் விளங்கிக் கொண்டால் எமக்கு இவ்வுலக வாழ்வுக்கும் மறுமை வாழ்வுக்குமிடையில் ஒரு சமநிலைத் தன்மையை ஏற்படுத்திக்கொள்ள அது உதவும். இவ்வுலகம் மறுமையின் பயிர்நிலம், ஆகையால் இதனை நாம் புறக்கணித்தால் எவ்வாறு மறுமைப் பேறுகளை அடைந்து கொள்ள முடியும்? என்பதனை நாம் சிந்தித்தாக வேண்டும். எனவே இவ்வுலக வாழ்வு மற்றும் மறுமை வாழ்வு பற்றிய தெளிவான விளக்கத்தினை நாம் எம்மத்தியில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## செயற்பாடுகள்

**ஒப்படைகள்**

1. உலகில் மனிதன் மட்டும் வாழவில்லை ஏனைய படைப்பினங்களும் வாழுகின்றன. மிருகங்கள் குறித்த மனிதனின் கடமைகள் பற்றிய ஒரு சம்பவத்தைத் தேடி எழுதுக.

2. உலக வாழ்வை வளப்படுத்த மனிதன் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதனைத் தொகுத்து எழுதுக.

**பின்வரும் வாக்கியங்களுக்கு சரி பிழை கூறுக.**

1. இஸ்லாம் துறவறத்தை ஆதரிக்கின்ற ஒரு மார்க்கமாகும். ( )
2. உலகத்தில் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் பற்றி அவன் மறுமையில் விசாரிக்கப்படுவான். ( )
3. உலக விடயங்கள் குறித்து ஒரு முஸ்லிம் பராமுகமாக இருக்க வேண்டும். ( )
4. சமூகத்தில் நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகப் பாடுபடல் ஒரு முஸ்லிமின் கட்டாயக் கடமையாகும். ( )
5. இவ்வுலக வாழ்க்கையை மறுமையின் பேறுக்காகப் பயன்படுத்திக் கொள்பவனே புத்திசாலியாவான். ( )
6. இஸ்லாம் எதிலும் நடுநிலைத் தன்மையைப் போதிக்கும் ஒரு மார்க்கமாகும். ( )
7. இஸ்லாம் இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகின்றது. ( )
8. இஸ்லாம் மனிதன் தனது சகோதரனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி எதையும் பேசவில்லை. ( )

## 8.2 பொழுது போக்கு

**ஆசிரியர் :** அஸ்ஸலாமு அலைக்கும் பிள்ளைகளே!

**மாணவர்கள் :** வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ

**ஆசிரியர் :** எல்லோரும் நலமாய் இருக்கின்றீர்களா?

**மாணவர்கள் :** ஆம், சேர். நாம் எல்லோரும் நலமாய் இருக்கின்றோம். அல்ஹம் துலில்லாஹ்.

**ஆசிரியர் :** நேற்று நான் உங்களுக்கு இஸ்லாத்தில் பொழுது போக்குகள் என்ற தலைப்பில் சில தகவல்கள் திரட்டிவரச் சொன்னேன் அல்லவா? அவ்வாறு திரட்டி வந்துள்ளீர்களா?

**மாணவர்கள் :** ஆம், சேர். நாம் எம்மால் முடியுமான அளவு பொருத்தமான விடயங்களைத் தேடியும், கேட்டும், தொகுத்து வந்துள்ளோம்.

**ஆசிரியர் :** நல்ல பிள்ளைகள் இப்பொழுது நாம் பாடத்துக்கு வருவோம். முதலில் நான் இஸ்லாத்தில் எவ்வாறு பயனுள்ளதாக நேரத்தைக் கழிக்கலாம் அல்லது பொழுது போக்குகள் எவ்வாறு அமைந்துள்ளன என சிறு விளக்கமளித்துப் பாடத்தை அறிமுகம் செய்கின்றேன்.

ஓய்வு என்பது அல்லாஹ்வின் மாபெரும் அருட் கொடைகளுள் ஒன்றாகும். ஓய்வு நேரத்தை நாம் அல்லாஹ்வினால் எமக்கு வழங்கப்பட்ட ஒரு அமானிதமாகவே கருத வேண்டும். அதனைப் பெறுமதியுள்ளதாகவே மதிக்க வேண்டும். இழந்துவிட்ட நேரத்தை எம்மால் எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் மீண்டும் பெற முடியாது. அல்லாஹ் எமக்கு அருளிய ஓய்வை நாம் அவன் சந்தோஷப்படும் விதத்திலேயே கழிக்க வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த விதத்தில் நாம் எமது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதனால் இபாதத் செய்த நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம். ''காலத்தைத் திட்டமிடுங்கள். காலம் பொன் போன்றது இது இறைவன் எமக்களித்த மாபெரும் பொக்கிஷம்'' மனிதனுடைய உடலும் உள்ளமும் உழைத்து உழைத்துக் களைப்பேறுகின்ற போது அதற்கு ஓய்வு தேவை. அவ்வாறு ஓய்வெடுப்பதனால் எமக்கு ஆறுதல், உற்சாகம், மகிழ்ச்சி, சுறுசுறுப்பு என்பன ஏற்படுகின்றன. சரி, அப்துல்லாஹ் நீங்கள் எந்தத் தகவலைப் பெற்று வந்துள்ளீர்கள்.

**அப்துல்லாஹ் :** எனது வாப்பா ஓய்வுடன் தொடர்பான ஒரு ஹதீஸைச் சொல்லித்தந்தார் நான் அதை வாசிக்கின்றேன் சேர்.

*''இரண்டு விடயங்கள் பற்றி அதிகமான மக்கள் அலட்சியத்துடன் உள்ளனர் அவை ஓய்வும் ஆரோக்கியமும் ஆகும்'' என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். (புஹாரி)*

**ஆசிரியர்:** நல்லதொரு ஹதீஸைச் சொன்னீர்கள் அப்துல்லாஹ்.....

**அஹ்மத்:** நல்லதோர் அறிவுரை, இதன் மூலம் நபி (ஸல்) அவர்கள் எமது ஓய்வு நேரத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்த வழிகாட்டுகிறார்கள்.

**ஹஸ்மத்:** சேர் நான் ஒரு ஹதீஸைத் தொகுத்து வந்துள்ளேன். வில்வித்தையையும் குதிரைச்சவாரியையும் கற்றுக் கொள்ளுங்கள். நான் குதிரை வீரர்களிலும் பார்க்க வில்வித்தை வீரர்களையே விரும்புகின்றேன். அம்பு எய்தக் கற்றுக் கொண்ட ஒருவர் அதனைக் கைவிடுவாராயின், அவர் இறைவனின் அருட்கொடை ஒன்றுக்கு மதிப்பளிக் கவில்லை என்பதாகும். என ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஆசிரியர்:** பொருத்தமான ஒரு ஹதீஸை ஹஸ்மத் சொன்னார். இந்த ஹதீஸ் ஏதாவது ஒரு தற்காப்புக் கலையை எமது ஓய்வு நேரங்களில் கற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

**அப்துர் ரஹ்மான்:** எனது தாத்தா எனக்கு நல்லதோர் சம்பவத்தைக் தொகுத்துத் தந்துள்ளார். அப்துல்லாஹ் இபுனு முஅப்பல் (ரழி) அவர்கள், தனது உறவினர் ஒருவர் சிறு கற்களைக் கொண்டு சுண்டி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு ‘‘இவ்வாறு செய்வதனை அண்ணலார் தடுத்துள்ளார்கள்’’ எனக் கூறினார், மீண்டும் மீண்டும் அவர் அவ்வாறு செய்யவே அல்லாஹ்வின் மீது ஆணையாக இனிமேல் நான் உம்மிடம் பேசமாட்டேன் எனக்கூறிச் சென்றார்கள்.

**ஆசிரியர்:** அப்துர் ரஹ்மான் சொன்ன சம்பவத்திலிருந்து சில பொழுது போக்குகள் வீணானவை. அவற்றினால் இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் எந்தவித பயனுமில்லை என்பதால் இவ்வகையான பொழுது போக்குகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**அஸாத்:** சேர் ‘‘நான் ஒரு இஸ்லாமிய சஞ்சிகையிலிருந்து தொகுத்து வந்துள் ளவற்றை வாசிக்கின்றேன். தான் வாழும் சூழலை அழகுபடுத்தல், பயன்தரும் பொழுது போக்காகும். பயன்தரு மரங்கள், மலர்ச்செடிகள் மூலம் தனது சூழலை அழகுபடுத்தல், சூழலைத் துப்பரவாக வைத்திருத்தல், பெண் பிள்ளைகள் தையல், பின்னல் வேலைகளில் ஈடுபடுதல், தாய்க்கு வீட்டு வேலைகளில் உதவுதல், தந்தைக்குத் தோட்ட வேலைகளில் உதவி செய்தல், வீட்டிலுள்ள முதியவர்க்குப் பணிவிடை செய்தல். வீட்டுத் தோட்டம் செய்தல், இஸ்லாமிய சஞ்சிகைகளை வாசித்தல், தினசரி பத்திரிகைகளை வாசித்தல்’’ இவை யாவும் பயன்தரும் பொழுது போக்குகள் ஆகும்.

**ஆசிரியர்:** நல்லது அஸாத் பயனுள்ள பொழுதுபோக்குகள் பல வற்றை உள்ளடக்கிய ஒரு பட்டியலையே கொண்டு வந்திருக்கிறார்.

**பாறூக்:** சேர் எமக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் அல்லாஹ்வை திக்ர் செய்வதும் பயனுள்ளது தானே?

**ஆசிரியர்:** ஆம்.. பாறூக், திக்ர் செய்வது எமது சிந்தனையை வளப்படுத்துகின்றது. உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றது, அதுமட்டுமல்லாது சைத்தானின் தீங்குகளை விட்டும் எம்மைப் பாதுகாக்கின்றது. அல்லாஹ் எமக்கு எண்ணற்ற நி.ஃமத்களைத் தந்துள்ளான். அவற்றை நினைத்து நாம் திக்ர் செய்ய வேண்டியது நமது கடமை. பிள்ளைகளே. ஒரு தடவை இப்னு

மஸ்ஊத் (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள். ''சிறிதளவு முன்னேற்றமுமின்றி கழிகின்ற நாட்களையிட்டு நான் கவலைப்படுவது போன்று வேறு எந்த ஒன்றுக்கும் நான் கவலைப்படுவதில்லை.

**சிப்ராஸ்:** சேர் பொழுதுபோக்கிற்காக உல்லாசப் பிரயாணம் போக முடியுமா?

**ஆசிரியர்:** ஏன் முடியாது ''பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய பேரருளைத் தேடிக்கொள்ளுங்கள் மேலும் நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூருங்கள்'' என அல்குர்ஆன் கூறுகின்றது.

எனினும், இஸ்லாத்தை நாம் வீட்டில் வைத்துவிட்டு உல்லாசப் பிரயாணம் போக முடியாது. சிலர் உல்லாசப் பிரயாணத்தில் மது அருந்துகிறார்கள். சூது விளையாடுகிறார்கள், பெண்களைச் சீண்டுகிறார்கள், ஆபாசமான வார்த்தைகளைப் பரிமாறுகின்றார்கள், சினிமாப் பாடல்களைப் பாடுகின்றார்கள், இவற்றையெல்லாம் தவிர்த்துக் கொண்டு இஸ்லாம் காட்டிய வழியில் அல்லாஹ்வின் பூமியைச் சுற்றிப்பார்க்கப் போவதில் தவறேதும் இல்லை.

**ஆசிரியர்:** பிள்ளைகளே! இன்னுமொரு முக்கியமான பொழுதுபோக்கு உள்ளது அதுதான் பயனுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவது. குறிப்பாக, ஓட்டப் பந்தயம், மல்யுத்தம் போன்றவைகளை இங்கு குறிப்பிடலாம் ரஸூல் (ஸல்) அவர்கள் புகழ்பெற்ற மல்யுத்த வீரன் ஒருவரைத் தோற்கடித்துள்ளார்கள் என்பது மகிழ்வான செய்தியாக உள்ளது.

இதுவரை பொழுதுபோக்குகள் பற்றிக் கலந்துரையாடினோம். இன்ஷா அல்லாஹ் அடுத்த பாடத்தில் சந்திப்போம். அஸ்ஸலாமு அலைக்கும்

**மாணவர்கள்:** வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

## செயற்பாடுகள்

1. பின்வரும் பொழுதுபோக்குகளை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பயனுள்ளவை, பயனற்றவை என வேறுபடுத்திக் காட்டுக.
    1. நண்பர்களுடன் அரட்டையடித்தல்.
    2. போதைப்பொருட்களை பாவித்தல்.
    3. ரமழான் காலத்தில் இரவில் விளையாடுதல்.
    4. இஸ்லாமிய சஞ்சிகைகளை வாசித்தல்
    5. வீட்டைத் துடைத்துத் துப்புரவு செய்தல்.
    6. கடைத்தெருவில் சுற்றித்திரிதல்.
    7. உடற்பயிற்சிகள் செய்தல்.
    8. மரக் கன்றுகளை நாட்டுதல்.
2. நேற்றைய உமது நாள் எவ்வாறு கழிந்தது என்பதை அட்டவணைப்படுத்திகாட்டுக.
3. இப்பாடத்தைக் கற்றபின்பு நாளை உமது பொழுதை எவ்வாறு நீர் திட்டமிடுவீர் என்பது பற்றி விளக்கம் தருக.
4. ''எமது ஓய்வு நேரத்தை இஸ்லாம் அனுமதித்த வழியில் கழிப்போம்'' என்ற தலைப்பில் மாணவர் மன்றத்துக்காக உரையொன்றைத் தயார் செய்க.

# 8.3 அறிவியல் துறைகள்

## அறிமுகம்..........

நாம் வாழும் பூமி உட்பட முழுப் பிரபஞ்சமும் மனித வாழ்க்கைக்காகவே படைத்து விரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் தனது தத்துவங்களையும் உண்மைகளையும் பொருந்தக்கூடிய வகையிலேயே மனிதர்களுக்கு அறிமுகம் செய்கின்றது. இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அதில் அறிவை வியாபிக்கச் செய்த இறைவன் அதனை விளங்கிக் கொள்ளவும் மனிதனுக்கு அறிவு அவசியமானது என அடித்துக் கூறுகின்றான்.

அல்-குர்ஆனின் ஆரம்பமாக இறங்கிய வசனமும் இன்னும் பல வசனங்களும் அறிவின் முக்கியத்துவத்தை, அதனை மனிதன் தேடிப் பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றதல்லவா? அல்-குர்ஆன் இறக்கப்பட்ட காலத்தை நாம் ஜாஹிலிய்யாக் காலம் என்கின்றோம் இதற்கான காரணம் அக்காலத்தில் அறிவுப் பஞ்சம் காணப்பட்டதேயாகும். அக்காலத்தில் அறிவு சம்பந்தமான மந்த நிலை காணப்பட்டதேயாகும்.

இஸ்லாம் அறிவுக்குப் போலவே ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது. எந்த விடயத்தையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அதனைத் தடையும் செய்கின்றது. மாறாக ஆராய வேண்டாமா? அறிவு பெற வேண்டாமா? சிந்திக்க வேண்டாமா? என மனிதனை அல்-குர்ஆன் பல்வேறு கோணங்களில் வினவுகின்றது. ஒரு விடயத்தை அவதானித்து ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுமாறு மனிதனை அது வேண்டி நிற்கின்றது, இதனாலேயே இஸ்லாம் அறிஞர்களின் மார்க்கமாகப் போற்றப்படுகின்றது, ஏனைய மார்க்கங்களில் கொடுக்காத முக்கியத்துவத்தை அது அறிவுக்குக் கொடுத்து சிறப்பித்துக் கூறுகின்றது. அறிவு என்று கூறும்போது அல்லாஹ்வின் சக்தியையும் மறுமையின் நிலையான தன்மையையும் புரிய வைக்கும் வகையில் அமைய வேண்டும் என்பது முக்கியமாகும்.

## முக்கியத்துவம்...........

முறையான அறிவானது எல்லாம் வல்ல இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பாலமாகும். ஓர் அடியானின் அறிவு வளர வளர அவன் இறைவனுக்கு நெருக்கமாக ஆகின்றான். இறைவனுடனான அவனது தொடர்பும் வளர்ந்து செல்கின்றது.

அநேகமான அறிஞர்கள் மெய்ஞ்ஞானிகளாகத் தோற்றம் பெற்றது இதனால்தான். அறிவு, ஆரோக்கியமான ஒரு மனித சமுதாயத்தை தோற்றுவிக்கின்றது. அறிவில் முன்னேற்றம் கண்ட சமுதாயங்கள் சகல துறைகளிலும், கலைகளிலும் முன்னேற்றம் கண்டு பெரும் சாம்ராஜ்யங்களையே உருவாக்கியதை வரலாறு எமக்கு எடுத்துக் கூறுகின்றது.

''வானங்கள் பூமியின் படைப்பிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோர்க்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன.'' (அல்குர்ஆன்)

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.

*''அறிவு தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்.''*

''அறிவைக் கற்றுக் கொடுங்கள் அதனைக் கற்பது அல்லாஹ்வுக்குப் பயப்படுவதாகும். அதனைத் தேடுவது இபாதத் ஆகும், அதனை மீட்டிப் பார்ப்பது தஸ்பீஹ் ஆகும். அதனைத்

இலவச விநியோகத்திற்காக

தேடித் திரிவது ஜிஹாத் ஆகும், அதனைக் கற்பிப்பது ஸதகாவாகும்.'' (அல்- ஹதீஸ்)

*''அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களின் உள்ளங்கள் மீது தாழிடப்பட்டுவிட்டதா? '' (47:24)*

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனம் ஹதீஸ்கள் போன்றவற்றை உற்று நோக்குகின்ற போது இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளைப் போலவே முறையான அறிவு பெறுவது ஒரு கட்டாயக் கடமையாகும் என்பது புலனாகின்றது. அறிவு மனிதனை சீராக்கிக் கொள்ள உதவும் மாபெரும் சக்தியாகும். இதனை உணர்ந்த அறிஞர்கள் தமது வாழ்நாட்களையெல்லாம் அறிவைத் தேடிப்பெறுவதிலேயே செலவிட்டுள்ளார்கள். பிறந்தது முதல் ஒருவனது இறப்பு வரை அறிவைத் தேடிக்கொண்டே இருக்கவேண்டும். அறிவு தேடுபவர்க்கு வயதோ காலமோ கிடையாது.

ஒருவன் தனது தனிப்பட்ட கடமைகளையும் சமூக வாழ்க்கை தொடர்பான கடமைகளையும் அவற்றை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்ற ஒழுங்கு முறையையும் கற்றுக் கொள்ளவேண்டியது வாஜிப் ஆகும். இஸ்லாமிய வரையறைகள், ஹராம் ஹலால் போன்றவை தனது நடை, உடை, பாவனை சம்பந்தப்பட்ட விடயங்கள், குழந்தை வளர்ப்பு, வீட்டுப்பரிபாலனம் போன்ற அத்தனை அம்சங்களையும் ஒருவன் கற்றிருப்பது அவசியமாகும்.

ஒரு காலகட்டத்தில் முஸ்லிம்கள் அறிவியல் துறையில் முன்னோடிகளாகத் திகழ்ந்து காணப்பட்டார்கள். அரசியல், பொருளாதாரம், மருத்துவம், புவியியல், வானியல், வாணிபம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முன்னோடிகள் முஸ்லிம்களாகவே காணப்பட்டார்கள்.

## அறிவைப் பெற்றுக்கொள்ளல்...

''அறிவைத் தேடுங்கள் அதற்குரிய மதிப்பைக் கொடுங்கள் விளையாட்டு வேடிக்கையுடன் அதனைக் கலக்காதீர்கள்'' அலி ரழியல்லாஹு அன்ஹு

''நீங்கள் காலையில் வீட்டிலிருந்து அறிவு தேடப்புறப்பட்டுச் சென்று ஏதேனும் ஒன்றைக் கற்று அதனை செயற்படுத்தினாலும், இல்லாவிட்டாலும் அது 1000 ரகஅத் நபில்தொழுவதை விட உமக்கு சிறந்நததாகும். (இப்னு மாஜா)

''அறிவு தேட வீட்டை விட்டுக் கிளம்பிச் செல்பவருக்கு மலக்குகள் துஆச் செய்கின்றார்கள்''

''கல்வி மு.்.மினின் கை தவறிய பொருள் அதனைக் கண்ட இடத்தில் எடுத்துக் கொள்ள அவனே உரித்துடையவன்'' (அல் - ஹதீஸ்)

''எவர் கல்வியைத் தேடிச் செல்கிறாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்தின் பாதையை இலகுபடுத்துகின்றான்.''

மேலே கூறப்பட்ட பொன்மொழிகளிலிருந்து அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வது எமது கட்டாயக் கடமை என்பது விளங்குகின்றது. நவீன காலத்தில் அறிவின் வாசல்கள் பல திசைகளிலும் என்றுமில்லாதவாறு திறந்துவிடப்பட்டுள்ளன. நாம் வாழும் இக்காலம் அறிவு வியாபித்துள்ள காலமாகும்.

- மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகள்
- சமூகத்தில் நடைபெறும் படிப்பினை பெறக்கூடிய சம்பவங்கள்.
- குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள் மற்றும் ஹதீஸ் தொகுப்புக்கள்.
- அறிஞர்களால் எழுதப்பட்ட ஹதீஸ்தொகுப்புக்கள், புத்தகங்கள், கட்டுரைகள்
- சஞ்சிகைகள், பயனுள்ள மாதாந்த வாராந்த வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகள், பயனுள்ள இணையத்தளங்கள்.

போன்ற பல்வேறு ஊடகங்கள் இன்றைய உலகில் அறிவைத் தேடிப்பெற எமக்குத் துணை புரிகின்றன.

### நமது கடமை...

இஸ்லாம் மற்றும் அதனுடைய இணை அம்சங்களை விளங்கக்கூடிய அளவுக்கு எம்மிடம் அறிவு போதுமானதாக இருக்கின்றதா? என்பதனை சுயவிசாரணை செய்ய வேண்டும். அறிவைப்பெற்றுக் கொள்வதன் மூலமே ஒருவன் பூரண முஸ்லிமாக முடியும். பின்வரும் விடயங்கள் பற்றிச் சற்று நாம் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளோம்.

நாம் அறிஞர்களிடமும் உலமாக்களிடமும் சென்று எமக்குத் தெரியாத விடயங்களைக் கேட்டு அறிந்து கொண்டோமா? எமது சிந்தனை, செவிப்புலன், ஆற்றல், பார்வை, எல்லாவற்றையும் கொண்டு நாம் இஸ்லாத்தை விளங்க முற்பட்டோமா? அல்லது நாம் கற்றுக்கொண்ட சில விடயங்களையேனும் அடுத்த சகோதரனுக்கு எத்திவைத்தோமா? கற்றவர்களுடன் சேர்ந்து இருக்க முற்பட்டோமா? என்று சிந்தித்தாக வேண்டும்.

''யா அல்லாஹ் எனது அறிவை விருத்தி செய்வாயாக'' என்று எமது ஐவேளை தொழுகையில் நாம் பிரார்த்திக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

''அறிவு பற்றி ஒருவரிடத்தில் வினவப்பட்டு அவர் அதனை மறைத்தால் மறுமை நாளில் அவருக்கு நெருப்பினால் கடிவாளமிடப்படும்.'' (அபூ தாவூத்)

## அறிஞர்கள் (ஆலிம்கள்)

அல்-குர்ஆனும் சுன்னாவும் கல்விஞானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதில் மட்டும் நின்று விடாது கல்விஞானத்தை உலகுக்குப் போதிக்க வந்த ரஸூல்மார்களின் வாரிசுகளான அறிஞர்கள் பற்றியும் அவர்களது முக்கியத்துவம், சிறப்புக்கள் பற்றியும் எடுத்துக்காட்டுவதனை நாம் அவதானிக்க முடியும்.

அறிவுடன் பண்பும் சேருகின்றபோதே அது பயனுள்ள அறிவாக மாறுகின்றது. நாம் அறிவைப் பெறுவதன் நோக்கம் அதனைப்பயன்படுத்தவே. நாம் பெற்ற அறிவைக் கொண்டு எமது சமூகம் பயன்பெற வேண்டும். அதே நேரம் பெற்ற அறிவின் பெருமையால் அல்லது மமதையால் வழி தவறிப்போன அறிஞர்களையும் நாம் இஸ்லாமிய வரலாற்றில் காணக் கூடியதாகவுள்ளது.

அல்லாஹ்வே அறிவின் அதிபதி, அவன் விரும்பியவருக்கு அறிவைக் கொடுக்கின்றான், தான் விரும்பியவரிடமிருந்து அறிவைத் திரும்பப் பெறுகின்றான். மனிதனுக்கு வழங்கப்பட்டத் அறிவு மிகவும் சொற்பமேயன்றி வேறில்லை. அத்தகைய அறிவை விருத்திசெய்து தரவேண்டும் என்று நாம் பிரார்த்திக்குமாறு அல்லாஹ்வே எமக்குக் கட்டளையிட்டுள்ளான்.

''இறைவா! என்னுடைய கல்விஞானத்தை அதிகப்படுத்துவாயாக!'' (20:114)

''உங்களில் விசுவாசிகளுக்கும் கல்விஞானமுடையோர்க்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்'' (58:11)

வெறும் பிரார்த்தனையோடு மட்டும் நின்றுவிடாமல் கல்வியைப் பெறுவதற்கான முயற்சிகளிலும் நாம் ஈடுபட வேண்டும்.

- ✶ மூஸா (அலை) அவர்கள் சில விடயங்களைக் கற்பதற்காக ஹிழ்ர் (அலை) அவர்களிடம் செல்லுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான்
- ✶ நபி சுலைமான் (அலை) அவர்கள் ஹுத்ஹுத் என்ற பறவையின் மூலம் ஒரு நாட்டைப் பற்றிய செய்தியை அறிந்து கொண்டார்கள்.

இலவச விநியோகத்திற்காக

அறிவு பெற்றவர்கள் தம்மைவிடத் தரத்திலும் அந்தஸ்திலும் குறைவாக இருப்பினும் நாம் அவர்களை நாடிச் சென்று கல்வியை அடைந்துகொள்ள வேண்டும்.

''நிச்சயமாக அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகளாவார்கள். நபிமார்கள் இந்த உலகத்தில் தீனாரையும் திர்ஹத்தையும் சொத்துக்களாக விட்டுச் செல்லவில்லை. இல்மைத்தான் விட்டுச் சென்றார்கள் இதனை எடுத்துக்கொண்டவர்கள் இந்த உலகத்தில் மிகப் பெரும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.''

(அபூ தாவூத் - திர்மிதி)

''அல்லாஹ் ஒருவனுக்கு நலவை நாடினால் அவனுக்கு மார்க்கம் பற்றிய விளக்கத்தைக் கொடுப்பான்'' ''அறிவைப்பெற்றவர்களை மறுமையில் அல்லாஹ் ஒரு மனிதன் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அந்தஸ்ததில் உயர்த்தி வைப்பான்''

''ஆபிதுக்கும் ஆலிமுக்கும் வித்தியாசம் சந்திரனுக்கும் ஏனைய நட்சத்திரங்களுக்கும் இடையிலான வித்தியாசம் போன்றதாகும்.''

''எனது ஆத்மா எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதாக்கப்பட்ட மனிதர்கள் கூட உலமாக்களுக்கு அல்லாஹ் கொடுக்கும் அந்தஸ்தைப் பார்த்து விட்டு அவர்களும் ஆலிம்களாக எழுப்பப்படுவதற்கு விரும்புவார்கள்'' என்ற ஹதீஸை இபுனு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

''ஆயிரம் வணக்கஸ்தர்களை வெற்றி கொள்வதனை விட ஓர் அறிஞனை வெற்றி கொள்வது சைத்தானுக்கு மிகக் கடுமையானது.'' (திர்மிதி)

அல்லாஹ்வும் அவனது ரஸுலும் அறிஞர்களையும் ஆலிம்களையும் புகழ்ந்தும், அவர்களின் அந்தஸ்தை உயர்த்தியும் பல இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும் கூறியுள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அறிஞர்கள் வாழ்வதனால்தான் இந்தப் பூமி வளம் பெறுகின்றது. அறிஞர்கள் நல்லதையே செய்கின்றார்கள், போதிக்கின்றார்கள், நல்லவற்றையே சிந்திக்கின்றார்கள். அவர்கள் நமக்கு ஹராம் ஹலால் போன்றவற்றைப் பிரித்துக்காட்டுகின்றார்கள் நம்மை வழி நடாத்துகின்றார்கள் சுருக்கமாகச் சொன்னால் நம்மை மறுமை நெருப்பிலிருந்தும் காத்துக் கொள்ள வழிகாட்டுகின்றனர்.

எனவே நாமும் எம்மால் முடியுமான அளவு அறிஞர்களையும் எமக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களையும், கண்ணியப்படுத்தி அவர்கள் மூலம் அறிவுபெற்று எம்மை நெறிப்படுத்திக் கொள்வோமாக.

## செயற்பாடுகள்

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடைதருக.

1. அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் இரண்டு ஹதீஸ்களையும் இரண்டு குர்ஆன் ஆயத்துக்களையும் குறிப்பிடுக.

2. அறிவைப் பெறுகின்ற போது மாணவர்களாகிய நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுக.

**இடைவெளி நிரப்புக.**

1. இஸ்லாம் அறிவுக்கு மட்டுமல்லாமல்.............முக்கியத்துவம் வழங்குகின்றது.
2. அல் குர்ஆனின் ஆரம்ப வசனமே................முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.
3. .................அவர்களைப் படைத்து இறைவன் சகல அறிவையும் அவர்களுக்கு கற்றுக்கொடுத்தான்.
4. ................சைத்தானின் பிடியில் இலகுவில் அகப்பட மாட்டார்கள்.
5. ................அவர்கள் சில விடயங்களைக் கற்றுக் கொள்ள ஹிழ்ர் (அலை) அவர்களிடம் சென்றுள்ளார்கள்.
6. முஸ்லிம் உம்மா ஒரு................மறைவையொட்டி கவலைப்பட வேண்டும்.
7. ............கல்விக்கு வழங்கிய முக்கியத்துவம் போன்று வேறு எந்த மார்க்கமும் வழங்கியதில்லை.
8. .................நபிமார்கள் தங்களின் வாரிசுகளாகக் குறிப்பிடுகின்றார்கள்.
9. அறிவுள்ள மக்களுக்கு அல்லாஹ்.........பல அத்தாட்சிகளை வைத்துள்ளான்.

## 8.4 அல் குர்ஆனின் அற்புதம்

அற்புதம் என்பதற்கு அறபியில் மு.்.ஜிஸாத் என வழங்கப்படுகின்றது. மு.்.ஜிஸாத் என்பது சாதராண மக்களால் நிகழ்த்த முடியாததும் பல ஆற்றல்களை வெளிப்படுத்துவதுமாகின்ற ஒரு சக்தியாகும். ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த நபிமார்களுக்குத் தமது நபித்துவத்தை நிரூபிக்கின்ற வகையில் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட விஷேட ஆற்றல்களே இவ்வாறு அழைக்கப்படுகின்றன. நபிமார்கள் அல்லாதோர்க்கு இது வழங்கப்படவில்லை. ஒவ்வொரு நபிமார்களுக்கும் அல்லாஹ் வெவ்வேறான மு.்.ஜிஸாத்களை வழங்கியிருந்தான். குறிப்பாக ஈஸா (அலை), மூஸா (அலை), தாவூத் (அலை), சுலைமான் (அலை), ஸாலிஹ் (அலை) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பல அற்புதங்களை அல்லாஹ்வின் உதவியால் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட நிரந்தரமான அற்புதம் அல்குர்ஆன் ஆகும். அது எத்தகையது என்றால் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இல்லாத காலத்திலும் தனது அற்புதங்ளை மனித சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் மனிதனால் அறிவின் சிகரத்தை எட்ட முடிந்தாலும் அவனது அறிவின் சக்தியால் அல் - குர்ஆனுக்குச் சவாலாக எதனையும் முன்வைக்க முடியவில்லை.

அல்குர்ஆனானது தனது மொழி நடையிலும், கருத்தாழத்திலும், முன்னறிவிப்புச் செய்வதிலும், வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துச் சொல்வதிலும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதிலும், மறைவான விடயங்களை எடுத்துச் சொல்வதிலும், ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும் தனிப்பெரும் அற்புதத் தன்மையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

### மொழிநடை

''அவர்கள் பயபக்தியுடன் இருப்பதற்காக எத்தகைய கோணலும் இல்லாத இந்தக் குர்ஆனை அறபு மொழியில் இறக்கி வைத்தோம்.'' (39:28)

அல்குர்ஆன் பிரயோகித்த மொழிநடையானது மிகவும் கவர்ச்சித்தன்மை கொண்டதாகவும், உள்ளத்தை ஈர்க்கும் தன்மை கொண்டதாதவும் காணப்படுகின்றது. அல்குர்ஆன் அருளப்பட்ட காலப்பகுதி அரேபியாவில் கவிஞர்களின் செல்வாக்கு மேம்பட்டுக்காணப்பட்ட காலப்பகுதியாகும். கவிஞர்கள் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துப் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

அப்படிப்பட்ட கவிஞர்களாகிய வலீத், லுபைத் போன்றவர்கள் கூட ஆச்சரியப்படும் அளவுக்கு அதன் வசனங்கள் செழுமை மிக்கதாகவும். வசீகரத்தன்மை கொண்டதாகவும் காணப்பட்டன. கவிஞர்களால் போட்டியிட்டு வெற்றிகொள்ள முடியாத அளவுக்கு அதனது மொழிநடை அமைந்திருந்தது. இவ்வாறு புகழ்பெற்ற கவிஞர்கள் குர்ஆனுக்கு முன்னால் தமது இயலாமையை ஒப்புக்கொண்டு சரணடைந்துள்ள சம்பவங்களையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

## கருத்துச் செறிவு

அல்குர்ஆனின் கொள்கைகள், போதனைகள், உலகில் வேறு எந்த நூலிலும் காணப்பெறவில்லை. மனிதவாழ்வு சீர் பெறுவதற்கான பல அடிப்படைக் கொள்கைகளை மிக அழகாக, ஆழமாக பல சாட்சிகளை உவமானமாகக் கொண்டு ஒப்பிட்டு உதாரணங்கள் கூறி அது விளக்கிச் செல்வதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அரசியல், பொருளாதார சட்டதிட்டங்கள், சமூக வாழ்க்கை தொடர்பான அம்சங்கள், இன்னும் பல்வேறு துறைகளையும் மற்றும் கலைகளையும் குர்ஆன் விளக்கிக்காட்டுகின்றது. மனித வாழ்வுக்குத் தேவையான சகல அம்சங்களையும் தெளிவுபடுத்தும் ஒரு நூலாகவே குர்ஆன் காணப்படுகின்றது.

## எதிர்வு கூறல்

அல்குர்ஆன் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் பல நிகழ்வுகளை முன்னறிவிப்புச் செய்கின்றது. இந்த வகையிலும் இது ஓர் அற்புதமே! உதாரணமாக ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் ரோம், பாரசீக இராச்சியங்கள் வீழ்ச்சிபற்றி அல்குர்ஆன் எதிர்வுகூறியது. அப்பேரரசுகள் இஸ்லாத்தின் கீழ்வரும் என எதிர்வு கூறப்பட்டது. நிகழ்ந்து விட்டது.

## வரலாற்றுச் சான்றுகளைக்கூறுதல்

இஸ்லாத்துக்கு முந்திய காலத்தில் நடந்த சில வரலாற்றுச் சான்றுகளையும் பல படிப்பினைகளையும் அது தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. உதாரணமாக ஸூரா ஆல இம்ரான், ஸூரா யூசுப் போன்ற ஸூராக்கள் முன்னைய நபிமார்களின் வரலாற்றையும் படிப்பினைகளையும் எடுத்துக்கூறுகின்றது. ஸூரத்துல் ''பீல்'' அப்ரஹாவின் யானைப்படைபற்றிய சம்பவத்தையும், பிரசித்தமான குகைவாசிகளின் சம்பவம் ஸூரத்துல் கஹ்பிலும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல்

அல்குர்ஆன் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட பல நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைப்பதில் அற்புதத் தன்மையைக் காட்டுகின்றது. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு வரப்பட்ட பல பிரச்சினைகள், ஸஹாபாக்களுக்கேற்பட்ட பிரச்சினைகள் போன்றவற்றுக்கு அல்குர்ஆன் சிறந்த பல தீர்வுகளை முன்வைத்து நின்றது. உதாரணமாக ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பற்றி எழுந்த கட்டுக்கதைகள் பற்றிய பிரச்சினைகளுக்கான தகுந்த தீர்வுகளை அல்குர்ஆன் முன்வைத்தது.

## மறைவான விடயங்கள் பற்றிக் கூறுதல்

மனிதனின் புலன்களுக்கு எட்டாத பல விடயங்களைப் பேசுவதிலும் அல்குர்ஆன் தனது அற்புத்தன்மையை வெளிக்காட்டி நிற்கின்றது. பிரபஞ்சம், வானங்கள், பூமியில் காணப்படுகின்ற படைப்புக்கள், அவற்றிலுள்ள மறைவான விடயங்கள், காற்று, நீர், நெருப்பு, மலைகள், மற்றும் மருத்துவ உண்மைகள் பற்றி விளக்குவதோடு மனிதர்களை அவற்றைப்பற்றிய ஆராய்ச்சிக்குத் தூண்டுவதாகவும் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்கூறப்பட்ட துறைகள் மட்டுமல்லாது அல் - குர்ஆனின் பாதுகாப்பும் ஓர் அற்புதமாகவே காணப்படுகின்றது. அது இறங்கிய காலம் முதல் இன்றுவரை அணுவளவேனும் எவராலும் மாற்றத்துக்குள்ளாக்கப்படாமல் அதன் ஆரம்ப வடிவிலேயே காணக்கூடியதாகவுள்ளது. அதனை அல்லாஹ்வே பாதுகாப்பதாக வாக்களித்துள்ளான். அல்குர்ஆன் உலகில் அதிகமான மக்களினால் மனனம் செய்யப்பட்ட அற்புத நூலாகவும் திகழ்கின்றதைக் காணலாம்.

## செயற்பாடுகள்

1. அல்குர்ஆனில் வரலாற்றுச் சம்பவங்கள் இடம் பெறுகின்ற ஐந்து ஸூராக்களின் பெயர்களை எழுதுக.
2. மு:்ஜிஸாத் வழங்கப்பட்ட நபிமார்கள் ஐவரின் பெயர்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட மு:்ஜிஸாத்களையும் அட்டவணைப்படுத்துக.
3. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிகழ்த்திக்காட்டிய சில அற்புதங்களைத் தேடி எழுதுக.
4. மு:்ஜிஸாத், கராமத் ஆகிய பதங்களுக்கிடையேயான வேறுபாட்டைத் தருக.
5. நபிமார்களுக்கு மு:்ஜிஸாத்கள் வழங்கப்படுவதற்கான காரணங்கள் யாவை?

## 8.5 உள ஆரோக்கியம்

ஒரு முஸ்லிம் உள ஆரோக்கியமானவனாக இருப்பது அவசியமாகும். அவ்வாறு இருப்பின் அவனது உடலும் சீரானதாக அமைந்து அமல்களும் சீரானதாக அமையும். மனிதனது உடலியல் தாக்கங்களுக்கு அவனது உள ரீதியான பாதிப்புக்களே காரணமாக அமைகின்றன எனப்பல ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. மனிதனுக்கு அநேகமாக ஏற்படும் இரத்த அழுத்தம், பாதித்தலைவலி, தூக்கமின்மை போன்றன மனத்தாக்கங்களுடன் தொடர்பான நோய்களே. ஒவ்வொரு மனிதனிடத்திலும் அமையப்பெற்றுள்ள அவனது நோயெதிர்ப்புச் சக்தியானது, பீதி, கவலை, தனிமை, தன்னம்பிக்கையீனம் போன்ற காரணிகளால் தாக்கத்துக்குள்ளாகின்றது.

அதே நேரம் ஒருவனுடைய மனதில் ஆசைகளும் அவாக்களும் நிரம்பிக் குடிகொண்டால் அவனது மனதை ''ஹவா'' எனும் பேராசை ஆட்கொண்டுவிடுகின்றது. இவ்வாறு குடிகொண்ட அவாக்களும் ஆசைகளும் அற்றுப்போகுமாயின் மனிதன் தைரியமிழந்து மனவுறுதி நலிவுற்று உணர்ச்சியற்ற வாழ்க்கை வாழவேண்டி நேரிடலாம். இந்த நிலைமை தொடர்ந்தால் மன நோய்கள், கோளாறுகள், விரக்தி மனப்பான்மைகள் ஏற்படலாம். எனவே இந்த நிலைமைகளிலிருந்து பாதுகாப்புப்பெற எமது மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது அவசியம். அவ்வாறு மாணவர்களாகிய உங்களது மனம் ஆரோக்கியமாக இருந்தால் தான் உங்களது கற்றல் நடவடிக்கைகளும் சீரானதாக அமையும்.

### உளரீதியான தாக்கங்களுக்கான காரணங்களை முதலில் ஆராய்வோம்

**உலகப்பற்று அதிகரித்தல்.**

ஒரு முஸ்லிமுடைய உலகம் சம்பந்தமான பற்று அவனிடத்தில் அதிகரிக்கின்ற போது ஆன்மீக வாழ்வு பாதிப்படைகின்றது. அளவு கடந்த உலக ஆசை ஒருவனுடைய மனதை அழுக்காக்கி விடுகின்றது. அது மனிதனை இவ்வுலகத்தில் இழிவுக்கும் மறுமையில் நரகத்துக்கும் இட்டுச் செல்லக்கூடியது. ''உலக ஆசையே அனைத்துத் தீமைகளுக்கும் ஆணிவேர்'' (அல் - ஹதீஸ்)

**பாவங்கள் அதிகரித்தல்.**

பாவங்கள் புரிவது, அவற்றுக்குத் துணைநிற்பது அதனைப் பொருட்படுத்தாமல் இருப்பது இவையெல்லாம் மனத்தாக்கங்களுக்குக் காரணமாக அமைகின்றது. நபியவர்களும் ஸஹாபாக்களும் பாவத்தின் பாற்பட்ட அனைத்தையும் வெறுத்தார்கள். அது மட்டுமல்ல பாவத்தில் ஈடுபடுவதனையும் மிகவும் வன்மையாகக் கண்டித்தார்கள்.

''உடலில் ஒரு சதைத்துண்டு இருக்கின்றது. அது சீராகிவிட்டால் முழு உடலும் சீராகிவிடும். அது கெட்டுவிட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும். அதுவே உள்ளமாகும்.'' (அல்-ஹதீஸ்)


இலவச விநியோகத்திற்காக

## அளவு கடந்த பேராசைகள்

''ஒரு மனிதனுக்குத் தங்கத்தால் ஓர் ஓடை இருந்தாலும் இரண்டாவதொன்று இருக்கவேண்டும் என்றே விரும்புவான். இறுதியில் அவனது வாயை மண்தான் நிரப்பும். (பாவமன்னிப்பு கோரி) இந்நிலமையிலிருந்து மீள்பவருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்குகின்றான்.'' (புகாரி-முஸ்லிம்)

''ஒரு விடயம் உங்களுக்கு மிகவும் நன்மையானகவிருந்தாலும் நீங்கள் அதனை வெறுக்கலாம். ஒருவிடயம் உங்களுக்குத் தீமையாக இருந்தாலும் அதனை நீங்கள் விரும்பக்கூடும். அவை உங்களுக்கு நன்மையளிக்குமோ தீமையளிக்குமோ என்பதனை அல்லாஹ் அறிவானே தவிர நீங்கள் அறியமாட்டீர்கள்.'' (அல்-பகரா:216)

மனிதனின் எல்லையற்ற ஆசைகளுக்கு முன்னால் பொருட்கள் பற்றாக் குறையாகக் காணப்படும்போது மனிதர்களிடையே போட்டி, பொறாமை ஏற்பட்டு பயங்கர மோதல்களுக்கு அது வழிவகுக்கும்.

## மனோ இச்சைகளுக்குக் கட்டுப்படுதல்

மனோஇச்சையோடு போராடுதல் மிகவும் கடினமான போராட்டமாகும். சில வேளை பாவங்களை விட்டுவிடுகின்றபோது வேதனைகள் ஏற்படுகின்றன. நன்மைகள் பால் நெருங்குகின்றபோது சோம்பலும் அதிருப்தியும் ஏற்படுகின்றன. ஒருவர் இறை பாதையிலிருந்து விலகி நடக்க அவனது மனஇச்சையே காரணமாக அமைகின்றது. ஒருவனது மனஇச்சை அல்லாஹ்வை விட்டும் அவனைத் தூரமாக்கி நரகுக்கு அழைத்துச் செல்லவல்லது. இந்த நிலமையை அல்-குர்ஆனும் அல் - ஹதீஸும் கண்டிக்கின்றது.

''தனது உள்ளத்துடன் போராடுவதனையே உண்மையான ஜிஹாத'' என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

## மன ஆரோக்கியம் பெறுவதற்கான வழிகள்

அழுக்கடைந்த உள்ளங்களில் இருந்து நன்மைகள் உருவாக முடியாது. அவ்வாறான உள்ளங்களில் மனிதத்தன்மை வெளிப்படுத்தப்படமாட்டாது. அழுக்கடைந்த உள்ளம் பெற்றவரின் இலட்சியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன.

*''ஓர் அடியானின் உள்ளம் சீராகாதவரை அவனது ஈமான் சீர் பெறாது'' (முஸ்னத் அஹ்மத்)*

எமது உள்ளங்களில் எத்தனை குப்பைகூளங்கள், அழுக்குகள், அசிங்கங்கள் மலைகளாகக் குவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அசிங்கமான உள்ளங்களில் இருந்து ஒருபோதும் சீரான அமல்கள் இடம்பெற மாட்டாது. அவ்வாறு உள்ளம் சீராகாவிட்டால் இறைதிருப்தியைப் பெறமுடியாது. எனவே இவ்வாறான உள்ளத்தை சீர்படுத்தி மன ஆரோக்கியம்பெற எந்த வகையான வழிமுறைகளைக் கையாளலாம் என்பதைத் தொடர்ந்து நோக்குவோம்.

## உள்ளத்தைப் பாதுகாத்துக் கொள்ளல்

பாவங்கள் எமது உள்ளங்களை மூடிக்கொள்ளு முன் அவற்றை நாம் தற்காத்துக்கொள்வது அவசியமாகும். உலகாசை, புகழாசை இவையனைத்தினதும் பிறப்பிடம் உள்ளமே. எனவே இவைகள் தோன்றமுன் உள்ளத்தைத் தற்காத்து உள்ளத்துக்குத் தேவையான உணவு ஊட்டப்பட வேண்டியதுடன் உள்ளத்தை சீர்செய்ய நமக்கு நல்லதோர் சூழலை ஏற்படுத்திக் கொள்ளல், அதற்காக நல்ல சகவாசங்களை அமைத்துக் கொள்ளல் என்பன மிக முக்கியமாகும்.

## பர்ளான கடமைகளை நிறைவேற்றல்

எமது தொழுகையை நாம் சீராக்கிக்கொள்ள வேண்டும். அதனை முடிந்தளவு ஜமாஅத்தாகத் தொழுதுவர வேண்டும்.

''அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத அந்தக்கடுமையான நாளில் ஏழு வகையான மனிதர்களுக்கு அல்லாஹ் தன்நிழலில் இடம்தருவான். அந்த ஏழுபேரில் ஒருவர் எத்தகையவரெனில் அவரின் உள்ளம் பள்ளிவாசலின் நினைவிலேயே இருக்கும். அவர் பள்ளிவாசலைவிட்டு வெளியே செல்லும்போது மீண்டும் பள்ளிவாசலுக்குப் புகுவதை எதிர்பார்த்த வண்ணம் இருப்பார்.'' ''என் கண்குளிர்ச்சி தொழுகையில் தான் உள்ளது.'' ''பிலாலே! தொழுவதற்கு அழையுங்கள் அதன் மூலம் ஆறுதலைத் தாருங்கள்'' என்பன நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் வாசகங்களாகும்.

## நபிகளாரின் ஸுன்னாக்களைக் கடைபிடித்து வாழ்தல்

ஒரு முஸ்லிம் தனது அனைத்து அன்றாட விடயங்களையும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித்தந்தவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். அத்தோடு அதற்கான அல்லாஹ்வின் கூலியையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதில் ஆசை கொள்ளுதலும் வேண்டும்.

*''அவன்தான் எழுத்தறிவில்லாத (அறபி) மக்களுக்கு ஒருதூதரை அவர்களிலிருந்தே தோற்றுவித்தான். அவர் எத்தகையவர் எனில் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காட்டுகின்றார். அவர்களின் வாழ்க்கையைத் தூய்மையாக்குகின்றார்.'' (அல்-ஜும்ஆ :2)*

## இறைவனை நினைவு கூருதல்

''இறைவனை நினைவுகூறுபவன் உயிருள்ள மனிதனுக்கு ஒப்பாவான். இறைவனை நினைவு கூறாதவனோ நடைப்பினம் ஆவான்'' (அல்-ஹதீஸ்)

''உங்கள் செயல்களில் உங்கள் ஆட்சியாளனாகிய அல்லாஹ்விடத்தில் தூய்மையானதும், உங்கள் அந்தஸ்த்தை உயர்த்தக் கூடியதும், தங்க வெள்ளி நாணயங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதனைவிட மேலானதும், புனித யுத்தத்திலே நீங்கள் ஈடுபட்டு விரோதியைக் கொல்வதாலோ அல்லது விரோதியினால் கொல்லப்படுவதாலோ உங்களுக்குக் கிடைக்கும் நன்மையை விடவும் உத்தமமான ஒரு செயலைச் சொல்லித்தரட்டுமா? என நபியவர்கள் கேட்க: ஆம் கூறுங்கள். என்று தோழர்கள் கூறியதும் அதுதான் அல்லாஹ்வை திக்ர் செய்வதாகும்.'' என்றார்கள்.

## பிரார்த்தனை புரிதல்

பிரார்த்தனை புரிதல் ஒரு வணக்கமாகும். நாம் மனம் உருகி கேட்கும் துஆக்கள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

''ஒருவர் தனது இரண்டு கைகளையும் ஏந்தி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால் அக்கரங்களை வெறுமையாக்கி திருப்பிவிட அல்லாஹ் வெட்கப்படுகின்றான்.'' (அல் ஹதீஸ்)

''எமது இரட்சகன் ஒவ்வொரு இரவிலும் என்னிடம் யார் பிரார்த்தனை புரிகின்றாரோ அவருக்கு நான் பதிலளிப்பேன். தனது தேவைகளை யார் கேட்கின்றாரோ அவருக்கு நான் வழங்குவேன். என்னிடம் யார் பாவமன்னிப்பு கோருகின்றாரோ அவரை நான் மன்னிப்பேன்.'' எனக் கூறுவதாக நபியவர்கள் கூறினார்கள். (புஹாரி - முஸ்லிம்)

### உள்ளத்தைத் தினமும் சுய விசாரணை செய்தல்

''நீங்கள் விசாரிக்கப்படுவதற்கு முன்னர் உங்களை நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள். உங்களது செயல்கள் நிறுக்கப்படுவதற்கு முன்னர் நீங்களே அவற்றை நிறுத்துக்கொள்ளுங்கள் அல்லாஹ்வை சந்திக்கப்போகும் அந்த மிகப்பெரிய நாளுக்கு ஆயத்தமாகுங்கள். - (உமர் ரழியல்லாஹு அன்ஹு)

### பாவமன்னிப்புத் தேடல்

''ஆதமுடைய மகனே! நீ இந்தப் பூமியின் அளவுக்குப் பாவங்கள் செய்து பின்னர் எனக்கு இணைவைக்காது என்னை நீ சந்தித்தால் நான் அந்தப் பூமியின் அளவுக்கு உனக்கு மன்னிப்பைத் தருவேன்.'' (திர்மிதி)

பாவங்களை விட்டுவிட்டு ஒருவர் அல்லாஹ்விடம் மீள்வதே உயர்ந்த பாவ மன்னிப்பு என்பதையும் அல்குர்ஆன் விளக்குகின்றது.

### பேணுதலாக நடத்தல்

''அபூ ஹுரைராவே! பேணுதல் உடையவராக இருப்பீராக! அப்போது நீரே மனிதர்களில் பெரும் வணக்கவாளியாக இருப்பீர்'' (திர்மிதி)

எனவே மாணவர்களாகிய நீங்களும் மேற்கூறப்பட்டவற்றைக் கடைபிடித்து உங்கள் உள்ளத்தைத் தூய்மையாக வைத்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட அல்லாஹ் அருள் புரிவானாக!

### ஒப்படை

''எமது மனதைத் தூய்மையாக எவ்வாறு வைத்துக்கொள்வது'' என்ற தலைப்பில் உமது பிரிவு மாணவர் மன்றத்தில் உரையாடுவதற்கு உரையொன்றைத் தயார் செய்க.